**09.03.2021 அ.வ.எண்.165/2008 வா.சா.2 வீரராகவன், த/பெ. ராஜி கவுண்டர்**

**குறுக்கு விசாரணை**

எனது மூத்த மகனின் பெயர் அருள். எனது இளைய மகன் பெயர் காந்தி ஆகும். எனது 2வது மகன் காந்தி என்பவரை 2ம் வாதி துரைகண்ணு என்பவரின் மகளுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். அந்த வகையில் 2ம் வாதி எனது சம்மந்தி என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தசமயத்தில் இறந்துபோன 1ம் வாதி மற்றும் 2ம் வாதி ஆகியோருடன் நான் வழக்கறிஞரை சந்திக்க சென்றேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன தகவலின் அடிப்படையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்தனர் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை நானும் எனது மகன் காந்தியும் சேர்ந்து விண்ணப்பித்து பெற்றோம் என்று சொன்னால் சரிதான். துரைகண்ணு என்பவர் திருமணம் ஆன முதல் அமுலூர் கிராமத்தில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். 1972ம் வருடம் போகியம் ஏற்படுவதற்கு முன்னதாகவே இறந்த 1ம் வாதி அந்த சொத்தில் அனுமதியின் பேரில் கூரை வீடு கட்டி குடியிருந்துவந்தார். போக்கியத்தொகை பைசல் செய்வதற்கு முன்னதாகவே கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. போகியத்தை பைசல் செய்ய நடவடிக்கை ஏதும் நாங்கள் எடுக்கவில்லை. நான் நில பேர வியாபாரம் செய்துவருகிறேன். சொத்து வாங்குவது சம்மந்தமான ஒப்பந்தங்கள் ஏற்படுத்துபவை குறித்து எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்தம் உரிய முத்திரைதொகை கொண்ட தாள்களில் தான் எழுதப்படும் என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு எவ்வளவு முத்திரை கொண்ட தாள்களை பெறவேண்டுமென்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட அன்று நான் செல்லவில்லை. அதுகுறித்து எனக்கு தெரியவந்தது. கிரைய ஒப்பந்தத்தை நாங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்த சமயங்களில் முத்திரை கட்டணம் மற்றும் அபராததொகை செலுத்த நடவடிக்கை ஏதும் எடுத்தோமா என்றால் இல்லை. நான் சொத்துக்கள் சம்மந்தமான வழக்குகளை தாக்கல் செய்து அவைகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். புறம்போக்கு நிலத்தில் இருக்கும் நிலத்திற்கும் வரி வசூல் செய்வார்கள். புறம்போக்கு நிலம் என குறிப்பிடப்பட்டு வரி வசூலிக்கப்படும். வேறு நபர்களுக்கு சொந்தமான இடத்தில் குடியிருக்கும் நபர்களிடமிருந்து வீட்டு வரி வசூலிக்கப்படும். அந்த வீட்டு வரியானது நிலத்தின் உரிமையாளர் பெயரில் வசூலிக்கப்படும். வா.சா.ஆ.1ல் உள்ள போகிய பத்திரத்தில் குப்பைகொட்டி அனுபவித்துவரும் காலிமனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வீடு ஏற்கனவே இருந்ததால் குப்பை கொட்டுவதற்காக போகியம் போடப்பட்டது. தாவா தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் சாய்கிருஷ்ணன் என்பவர் உயிருடன் இருந்தார். கிரைய ஒப்பந்தத்தின்படி கிரையம் செய்துகொடுக்க உத்தரவிடும்படி பரிகாரம் கோரி சாய்கிருஷ்ணன் என்பவருக்கு எதிராக இறந்த 1ம் வாதி மற்றும் 2ம் வாதி வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளாரா என்று கேட்டால் இல்லை. வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்று சத்திரம் கட்டியுள்ளாரா என்று கேட்டால் கட்டியுள்ளார். ருக்மணியம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற நிலத்தை சின்னகண்ணுஅம்மாள் தான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. கூரைவீட்டை

கொளுத்திவிட்டது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. நான் சொன்னவாறு தாவா சொத்தில் கூரைவீடு ஏதும் இல்லை என்றும், தவறாக வீட்டை கொளுத்திவிட்டதாக கூறி புகார் அளிக்கப்பட்டதால் அந்த புகாரின் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனரா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொன்னவாறு இறந்த 1ம் வாதிக்கும் சாய்கிருஷ்ணன் என்பவருக்குமிடையே கிரைய ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்றும், போகியம் பைசல் செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை 15 செண்ட் நிலம் சம்மந்தமாக வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். தற்போது தாவா சொத்தின் மதிப்பு 1 செண்ட் ரூ.50,000/-ம் ஆகும். வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தின் மதிப்பு 1 செண்ட் ரூ. 2000/- முதல் ரூ.3000/-ஆகும். 2006ம் வருடம் சாய்கிருஷ்ணன் மற்றும் சின்னகண்ணு அம்மாள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் 1 சதுரடி 10 ரூபாய் என்ற அடிப்படையில் சொத்தின் மதிப்பு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அது சரியான மதிப்பீடா என்று கேட்டால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1998ம் வருடம் சாய்கிருஷ்ணன் என்பவரிடமிருந்து ருக்மணியம்மாள் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கிரைய பத்திரம் எழுதப்பட்டு சுமார் ஒருமாத காலத்திற்கு பிறகு தெரியவந்தது. சாட்சி தற்போது பத்திரம் எழுதப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்கு பிறகு தெரியவந்ததாக கூறுகிறார். வாதிகள் எனது உறவினர் ஆனபடியால் அவர்களுக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

வா.சா.ஆ1 மற்றும் 2ல் உள்ள ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பின்புதான் நான் எனது மகனை 2ம் வாதியின் மகளுக்கு திருமணம் செய்துகொடுத்தேன். திருமணம் செய்து கொடுத்த பின்புதான் துரைகண்ணு என்பவர் எனது உறவினர் ஆனார். திருமணத்திற்கு முன்பு எனக்கும் 2ம் வாதிக்குமிடையே எந்த சம்மந்தமும் இல்லை.